www.tntextbooks.in

தமிழ்நாடு அரசு

# மூன்றாம் வகுப்பு

## பருவம் – 1

## தொகுதி – 2

# கணக்கு
# அறிவியல்
# சமூக அறிவியல்

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

# பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

www.tntextbooks.in

**தமிழ்நாடு அரசு**

முதல் பதிப்பு - 2019

திருத்திய பதிப்பு - 2020, 2022

(புதிய பாடத்திட்டத்தின் கீழ்
வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

**விற்பனைக்கு அன்று**

**பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்**

*மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்*
© SCERT 2019

**நூல் அச்சாக்கம்**

*தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்*

www.textbooksonline.tn.nic.in



TN_GOVT_3 Std_Maths_Front Page TM.indd 2 2/20/2020 6:41:42 PM

3

# சமூக அறிவியல்

## பருவம் - 1



www.tntextbooks.in

# பொருளடக்கம்


| அலகு | தலைப்பு | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|
| 1 | குடும்பம் | 117 | ஜூன் |
| 2 | நமது நண்பர்கள் | 132 | ஜூலை |
| 3 | ஊராட்சி மன்றம் | 146 | ஜூலை & ஆகஸ்டு |
| 4 | பாதுகாப்பு | 158 | செப்டம்பர் |




8BKAE

மின்னூல்

0M5X3

மதிப்பீடு



3rd Social Science Term 1 Index.indd 116 2/19/2020 8:14:04 PM

# அலகு 1 குடும்பம்

## கற்றல் நோக்கங்கள்

- குடும்பத்தைப் பற்றி அறிந்துகொள்ளல்.
- குடும்ப உறுப்பினர்களின் உறவுமுறைப் பற்றி புரிந்துகொள்ளல்.
- குடும்பங்களின் வகைகள் பற்றி தெரிந்துகொள்ளல்.
- உறவு மற்றும் சமுதாயம் இவற்றிற்கு இடையேயான வேறுபாடுகள் பற்றி புரிந்துகொள்ளல்.
- குடும்பம் பாதுகாப்பு அளிக்கிறது என்பதனைப் புரிந்துகொள்ளல்.

8ER9J

## உரையாடல்

(மதியும், கபீரும் நண்பர்கள். இருவரும் அங்காடியில் சந்திக்கின்றனர்.)

**மதி** : கபீர், நாம் சந்தித்து எத்தனை நாள்கள் ஆகிவிட்டன? நீ எப்படி இருக்கிறாய்?

**கபீர்** : நன்றி, நான் நலமாக உள்ளேன். உன்னைச் சந்தித்தது மகிழ்ச்சியாக உள்ளது. நீ எப்படி இருக்கிறாய்?

**மதி** : நானும் நலமாக உள்ளேன். நான் என் மாமாவுடன் நீலகிரி காட்டிற்கு (மசினாங்குடி) சுற்றுலா சென்றது உனக்குத் தெரியுமா?



3rd_Social_Science_Unit_1.indd 117 2/19/2020 8:14:37 PM

கபீர் : அப்படியா! தெரியாதே! அதைப்பற்றிக் கூறு.

மதி : சுற்றுலா செல்வதற்கு அது மிகவும் அருமையான இடம். நான் பறவைகளும், விலங்குகளும் காட்டில் வாழ்வதைப் பார்த்தேன்.

கபீர் : அப்படியா!

மதி : ஆமாம்! அதை வார்த்தைகளால் விவரிக்க முடியாது! நான் அங்கு விலங்குகள் குடும்பமாக வாழ்வதைக் கண்டேன்.

கபீர் : உண்மையாகவா! மனிதர்கள் மட்டும் தான் குடும்பமாக வாழ்கின்றனர் என்று நான் நினைத்தேன்.

மதி : உனக்கு வாய்ப்புக் கிடைத்தால் நீயும் ஒரு முறை அங்கு சென்று பார்த்து விட்டு வா!

கபீர் : நிச்சயமாக, இந்த விடுமுறையில் என் தந்தையிடம் கூறி அழைத்துச்செல்ல சொல்கிறேன்.

மதி : மிகவும் நல்லது. இப்பொழுது நாம் ஒரு சொல் விளையாட்டை விளையாடுவோமா? நான் கேள்விகள் கேட்கிறேன். நீ பதில் சொல்ல வேண்டும், சரியா?

கபீர் : நான் எப்பொழுதும் சவாலை எதிர்க்கொள்ளத் தயாராக உள்ளேன். கேள்விகளைக் கேள்!

மதி : சிங்கங்கள் எங்கு வாழ்கின்றன?



3rd_Social_Science_Unit_1.indd 118 2/19/2020 8:14:45 PM

www.tntextbooks.in

**கபீர்** : சிங்கங்கள் காடுகளில் வாழ்கின்றன.

**மதி** : ஆம். சிங்கங்கள் காடுகளில் உள்ள குகைகளில் குடும்பமாக வாழ்கின்றன.

**கபீர்** : சரி... சரி அடுத்த கேள்வியைக் கேள்.

**மதி** : பறவைகள் எங்கு வாழ்கின்றன?

**கபீர்** : பறவைகள் மரங்களிலும், உயரமான இடங்களிலும் உள்ள கூடுகளில் வாழ்கின்றன.

**மதி** : மிகவும் சரி, யானைகள் கூட்டமாக வாழ்வதை நாம் எவ்வாறு அழைப்போம்?

**கபீர்** : **யானைக்கூட்டம்.**

**மதி** : ஆம். நீ கூறுவது சரி.



3rd_Social_Science_Unit_1.indd 119 2/19/2020 8:14:52 PM

www.tntextbooks.in

**கபீர்** : நன்று நாம் விலங்குகள் கூடிவாழ்வதைப் பற்றித் தெரிந்துகொண்டோம்.

**மதி** : ஆம். உண்மைதான். உன்னுடன் எனது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டது மகிழ்ச்சியாகவுள்ளது.

**கபீர்** : நாமும் நமது வீட்டிற்குச் செல்லவேண்டிய நேரம்வந்துவிட்டது .

**மதி** : ஆமாம். நாமும் நமது குடும்பத்துடன் இணைவோம்.

**வாருங்கள் நண்பர்களே, நமது குடும்பங்களைப் பற்றித் தெரிந்துகொள்வோம்.**




# நமது குடும்பம்

தாய்,தந்தை, குழந்தைகள் மற்றும் நெருங்கிய உறவினர்களுடன் வாழ்வதை **குடும்பம்** என்கிறோம்.




உன் தெருவில் எத்தனை குடும்பங்கள் வசிக்கின்றன?




**தனி நபர்கள்** சேர்ந்து குடும்பத்தை உருவாக்குகின்றனர். பல குடும்பங்கள் சேர்ந்து **சமுதாயத்தை** உருவாக்குகின்றன.

மக்கள் **பன்முகத்தன்மையுடன் வெவ்வேறு** மொழி, பண்பாடு மற்றும் பழக்கவழக்கங்களுடன் உலகத்தில் குடும்பங்களாக வாழ்கின்றனர்.



இந்தியக் குடும்பம்



மெக்சிகன் குடும்பம்



சீனக் குடும்பம்



ஆப்பிரிக்கக் குடும்பம்



ஸ்காட்டிஸ் குடும்பம்



ரஷ்யக் குடும்பம்



ஜப்பானியக் குடும்பம்




அரேபியக் குடும்பம்



3rd_Social_Science_Unit_1.indd 121 2/19/2020 8:15:06 PM

உன் குடும்ப உறுப்பினர்களின் புகைப்படத்தைக் கீழ்க்கண்ட குடும்ப மரத்தில் ஒட்டவும்.




நீ யாருடன் வசிக்கிறாய் ?

## உறவுகள்

### தாய்வழி உறவு முறை

உறவினர், தாய்வழி மூலம் உறவினர்களாக மாறுவது தாய்வழி உறவுமுறை என்கிறோம்.

### தந்தைவழி உறவுமுறை

உறவினர், தந்தைவழி மூலம் உறவினர்களாக மாறுவது தந்தைவழி உறவுமுறை என்கிறோம்.

**செயல்பாடு**

நாம் எழுதுவோம்

உனது குடும்பத்தில் உள்ள தாய்வழி உறவுமுறை, தந்தைவழி உறவுமுறை உறவினர்களின் பெயர்களைப் பட்டியலிடுக.


| என் தாய்வழி உறவினர்கள் | என் தந்தைவழி உறவினர்கள் |
| --- | --- |
| ______________ | ______________ |
| ______________ | ______________ |
| ______________ | ______________ |
| ______________ | ______________ |
| ______________ | ______________ |
| ______________ | ______________ |

www.tntextbooks.in

## குடும்ப வகைகள்

**குடும்பங்கள்**


- சிறிய குடும்பம்
- பெரிய குடும்பம்
- கூட்டுக்குடும்பம்





**மேலே உள்ள படங்களில் நீங்கள் என்ன காண்கிறீர்கள்?**

1. முதலாவது படத்தில் தாய் தந்தை மற்றும் குழந்தைகளைக் காண்கிறோம். இவ்வகை குடும்பத்தைச் **சிறிய குடும்பம்** என அழைக்கின்றோம்.
2. இரண்டாவது படத்தில் தாய், தந்தை மற்றும் இரண்டிற்கு மேற்பட்ட குழந்தைகள் உள்ளனர். இவ்வகை குடும்பத்தைப் **பெரிய குடும்பம்** என அழைக்கின்றோம்.
3. மூன்றாவது படத்தில் உள்ள குடும்பம் பெரியதாக உள்ளது. இரண்டு அல்லது மூன்று தலைமுறைகள் ஒன்றாக சேர்ந்திருப்பதைக் காண்கிறோம். இவ்வகை குடும்பத்தைக் **கூட்டுக்குடும்பம்** என அழைக்கின்றோம்.






3rd_Social_Science_Unit_1.indd 124 2/19/2020 8:15:09 PM

www.tntextbooks.in

## குடும்பத்தின் சிறப்பு அம்சங்கள் (மதிப்புகள்– Values)

- குடும்பம் நமது அடிப்படைத் தேவைகளான உணவு, உடை மற்றும் இருப்பிடத்தை அளிக்கின்றது.
- குடும்பம் என்பது உடல் ரீதியான, மன ரீதியான, ஒழுக்க ரீதியான வளர்ச்சியை அளிக்கும் முதல் பள்ளியாகச் செயல்படுகிறது.
- குடும்ப உறுப்பினர்கள் பல்வேறு வகையானப் பண்புகளுடன் இணைந்து வாழ்கின்றனர்.

அவற்றுள் சில **பண்புகள் (மதிப்புகள்- Values):**

**அன்பு**



**மரியாதை**



**பாதுகாப்பு**



**பகிர்ந்து கொள்ளல்**



### செயல்பாடு
நாம் எழுதுவோம்

**உனது குடும்பத்தில் உன் உறவினர்களிடையே காணப்படும் சில மதிப்புகளைப் பட்டியலிடுக.**

**சகிப்புத்தன்மை**

______________________________

______________________________

______________________________

______________________________



3rd_Social_Science_Unit_1.indd 125 2/19/2020 8:15:11 PM

## குடும்பத்தின் ஒற்றுமை

நாம் தனியாக வேலை செய்வதை விட சேர்ந்து வேலை செய்வது நல்லது. இது வேலையின் சுமையைக் குறைக்கிறது. உறவுமுறையை வலுப்படுத்துகிறது. குடும்பத்தின் ஒற்றுமை ஓங்குகிறது.

**நாம் அறிந்து கொள்வோம்.**

குழந்தைகளாகிய நீங்கள், உங்கள் வேலையை நீங்களே செய்வது நல்லது. உனது பொருள்களை அதற்குரிய இடத்தில் வைப்பது மிகவும் நல்லப் பழக்கம். இது உனது ஒழுக்கத்தை மட்டுமல்லாமல் பொருள்களைத் தேடுவதற்கான நேரத்தையும் குறைக்கிறது.



**நீ உனது உடைமைகளை எவ்வாறு பராமரிக்கிறாய்? உனது நண்பர்களுடன் கலந்துரையாடு.**

### நமது உறவினர்கள்

நமது குடும்ப உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் தூரத்து உறவினர்கள் கூட நம் வீட்டிற்கு வருவார்கள். அனைத்து குடும்ப உறுப்பினர்களும் குடும்ப விழாவில் ஒன்று கூடுவர். அவர்கள் நம் வீட்டிற்கு வரும்பொழுது நாம் அவர்களை வரவேற்க வேண்டும். நாம் அவர்களுடன் உரையாடி அவர்களின் தேவைகளை அறிந்துக்கொள்ளவேண்டும். இது நாம் அவர்களுக்கு செலுத்தும் மரியாதை ஆகும். **விருந்தோம்பல்** (Hospitality) என்பது தமிழர்களின் சிறந்த பண்பு. இது நமது உறவுமுறையை வலுப்படுத்தும்.

**உனது உறவினர்களை எவ்வாறு அழைப்பாய்?**

1. அம்மாவின் அம்மா ______________________
2. அப்பாவின் அப்பா ______________________
3. தந்தையின் சகோதரி ______________________
4. தாயின் சகோதரன் ______________________



**உங்கள் உறவினர்கள் வரும்பொழுது நீங்கள் எவ்வாறு நடந்து கொள்வீர்கள் ?**



3rd_Social_Science_Unit_1.indd 126 2/19/2020 8:15:11 PM

www.tntextbooks.in

## செயல்பாடு
நாம் எழுதுவோம்






3rd_Social_Science_Unit_1.indd 127 2/19/2020 8:15:12 PM

## வெளியாள்கள்

நமது உறவினர்களைத் தவிர, வெளியாள்கள் கூட நமது வீட்டிற்கு வருவார்கள். பால்காரர், காய்கறி வியாபாரி, எரிவாயு உருளைத் தருபவர் போன்ற **வெளியாள்கள்** வருவார்கள். அவர்களிடம் நாம் கவனமாக நடந்து கொள்ள வேண்டும்.

## அண்டை வீட்டுக்காரர்

நமது வீட்டருகே பல குடும்பத்தினர் வசிக்கின்றனர். நாம் அவர்களை **அண்டை வீட்டுக்காரர்கள்** என அழைக்கிறோம். நாம் அவர்களுடன் சுமூகமான உறவுமுறையுடன் பழக வேண்டும். தேவைப்படும் பொழுது ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளவேண்டும். இது நமது பாதுகாப்பை உறுதிப்படுத்தும்.


நாம் அறிந்து கொள்வோம்.

சிலர் செல்லப்பிராணிகளை தமது குடும்ப உறுப்பினர்களைப் போல வளர்த்து வருகின்றனர்.





**உனது வீட்டில் ஏதாவது செல்லப்பிராணி உள்ளதா?**



**சிந்தனை செய்**

நீ ஒரு பொருளை வாங்குவதற்கு முன்,
இது நமக்கு தேவையா
என்று யோசித்தது உண்டா?

## குடும்பத்தின் வரவு செலவு திட்டம் (Budget of the family)

வரவும் செலவும் ஒரு குடும்பத்தின் முக்கிய அம்சங்கள். நாம் வரவுக்கேற்ற செலவு செய்ய வேண்டும். அடிப்படைத் தேவைகளை நாம் முதலில் நிறைவேற்ற (Fulfill) வேண்டும். நாம் **வரவு செலவு திட்டத்தின்படி (Budget)** செலவு செய்ய வேண்டும். வரவுக்கு அதிகமாகச் செலவு செய்தால் பொருளாதார சிக்கல் ஏற்படும். **எளிமையே** நமது வாழ்வின் மிகச்சிறந்த கொள்கை ஆகும்.



**கலைச் சொற்கள்**

**நிறைவேற்றுதல்** : Fulfill
**விருந்தோம்பல்** : Hospitality
**மதிப்புகள் (பண்புகள்)** :Values




**உனது குடும்பத்தில் எத்தனை நபர்கள் பொருளீட்டுகின்றனர்?**



**நீ பணத்தைச் சேமிக்கிறாயா?**





### மீள்பார்வை

- குடும்பமே சமுதாயத்தின் அடிப்படை அலகு ஆகும்.
- அடிப்படைத் தேவைகளான உணவு, உடை மற்றும் இருப்பிடத்தை குடும்பம் நமக்கு அளிக்கிறது.
- குடும்பத்தில் ஒருவருக்கொருவர் சார்ந்து வாழ்வது ஒற்றுமையை வளர்க்கிறது.
- குடும்பம் நமக்கு கட்டுப்பாடு, ஒழுக்கம், பகிர்ந்து கொள்ளல் போன்ற மதிப்புகளை அளிக்கிறது.
- ஒரு குடும்பம் அதன் வரவு–செலவுத்திட்டத்திற்கு ஏற்ப செலவு செய்ய வேண்டும்.
- குடும்பம் நமக்கு பாதுகாப்பு உணர்வை அளிக்கிறது.



3rd_Social_Science_Unit_1.indd 129 2/19/2020 8:15:14 PM



# மதிப்பீடு



### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1) சமுதாயத்தின் அடிப்படை அலகு____________ ஆகும்.
அ) கிராமம் ஆ) நகரம் இ) குடும்பம்

2) ____________ நமது அடிப்படை தேவைகளில் ஒன்று.
அ) சாய்விருக்கை (சோபா) ஆ) இருப்பிடம் இ) மகிழுந்து

3) தாய், தந்தை மற்றும் குழந்தைகள் சேர்ந்து வசிப்பது ____________.
அ) சிறிய குடும்பம் ஆ) பெரிய குடும்பம் இ) கூட்டுக்குடும்பம்

4) ____________ தமிழர்களின் மிகச்சிறந்த பண்பு ஆகும்.
அ) விருந்தோம்பல் ஆ) விழாக்கள் கொண்டாடுவது
இ) கோயிலுக்குச் செல்லுவது

5) குடும்பத்தை நடத்த____________ திட்டமிடுவது பொருளாதாரத்தை மேம்படுத்தும் வழியாகும்.
அ) செல்வத்தை ஆ) பணத்தை இ) வரவு– செலவை

### II பொருத்துக .

| | | |
|---|---|---|
| 1 பண்பு | – | ஒற்றுமையுடன் வாழ்வது |
| 2 வேலையைப் பகிர்வது | – | மாமா |
| 3 தாய்வழி உறவுமுறை | – | காய்கறி வியாபாரி |
| 4 வெளியாள்கள் | – | உறவுமுறையை வலுப்படுத்துவது |
| 5 அண்டை வீட்டுக்காரர் | – | மரியாதை |

### III சரியா / தவறா என்று எழுதுக.

1) ஒரு குடும்பமானது அடிப்படைத் தேவையைப் பூர்த்தி செய்யும். ( )

2) நமது அண்டை வீட்டுக்காரர்கள் நமது உறவினர்கள். ( )

3) நமது வரவு–செலவைத் திட்டமிடுவதால் பொருளாதாரம் உயரும். ( )

4) நாம் நமது பொருள்களை எங்கு வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். ( )

5) எளிமையே ஒவ்வொரு குடும்பத்தின் சிறந்த கொள்கையாகும். ( )



3rd_Social_Science_Unit_1.indd 130 2/19/2020 8:15:17 PM

**IV பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

1) குடும்பத்தின் வகைகளை எழுதுக.

2) கூட்டுக்குடும்பம் என்றால் என்ன?

3) நமது குடும்பத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பண்புகள் யாவை?

4) அண்டை வீட்டுக்காரர்கள் என்போர் யாவர்?

5) குறிப்பு வரைக: 'குடும்ப வரவு–செலவுத் திட்டம்'

செயல்பாடு

# செயல் திட்டம்

**உனது குடும்ப வரவு–செலவு திட்டத்தைக் கீழ்க்காணும் அட்டவணையின்படி தயாரிக்கவும். பின் சரியான இடத்தில் குறியிடவும்.**

| வரவு (ரூபாய்) | | செலவு (ரூபாய்) | |
|---|---|---|---|
| இனம் | தொகை | இனம் | தொகை |
| ஊதியம் (வரவு) | | அரிசி, மளிகைப்பொருள்கள் | |
| | | காய்கறி | |
| மற்ற வருவாய் மூலங்கள் | | | |
| | | | |
| | | | |
| மொத்தம் | | மொத்தம் | |

- வரவும் செலவும் சமமாக உள்ளது ☐
- வரவு செலவைவிட அதிகமாக உள்ளது ☐
- வரவு செலவை விட குறைவாக உள்ளது. ☐



3rd_Social_Science_Unit_1.indd 131 2/19/2020 8:15:17 PM

www.tntextbooks.in




அலகு 2

# நமது நண்பர்கள்






## கற்றல் நோக்கங்கள்



- நமது நண்பர்கள் பற்றி அறிந்துகொள்ளல்.
- அவர்களின் வேலையின் தன்மையைப் பற்றி புரிந்துகொள்ளல்.
- சமூக தொழிலாளர்களின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளல்.



சமுத்ரா என்ற ஏழு வயது சிறுமி தனது அம்மா வெண்ணிலாவுடன் மளிகைப்பொருள்கள் வாங்க அங்காடிக்குச் செல்கிறாள். அவர்கள் நடந்து செல்லும்பொழுது பல்வேறு வகையான தொழில்கள் செய்பவர்களைக் கடந்துச் செல்கின்றனர்.





3rd_Social_Science_Unit_2.indd 132 2/19/2020 8:16:09 PM

அம்மா வெண்ணிலா: செல்லமே சமுத்ரா, நாம் சாலையில் நடந்துச் செல்லும்போது வலது புறமாக மட்டுமே செல்ல வேண்டும். நடுவில் செல்லக்கூடாது. நாம் அங்காடியின் உள்ளே செல்லும் பொழுது கூட்டம் அதிகமாக இருக்கும். தனித்து செல்லாதே.

சமுத்ரா: அம்மா! ஏதோ ஒலி கேட்கிறதே! என்ன ஒலி அது? மணியோசையா?


அம்மா: முதலில் ஓரமாக வா. அது தீயணைப்பு வாகனத்தின் ஓசை. ஏதாவது ஒரு இடத்தில் தீப்பிடித்திருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

சமுத்ரா: அப்படியா!

அம்மா: நடந்து செல்லுபவர்களுக்கான எச்சரிக்கை மணி அது. அப்பொழுதுதான் தீயணைப்பு வாகனத்திற்கு வழிவிடுவார்கள்.

சமுத்ரா: எதற்காக வழிவிடவேண்டும் அம்மா?

அம்மா: அது மிகவும் அவசரத்தைக் குறிக்கும். பாதிக்கப்பட்ட இடத்திற்கு சரியான நேரத்திற்கு சென்றால்தான் மக்களையும், பொருள்களையும் காப்பாற்ற முடியும்.





3rd_Social_Science_Unit_2.indd 133 2/19/2020 8:16:10 PM

சமுத்ரா: தீயணைப்பு வாகனம் எப்படி மனிதர்களைக் காப்பாற்றும்?

அம்மா: உனது ஆர்வத்தைக் கண்டு பெருமைப்படுகிறேன். அவ்வண்டியில் மக்களையும், பொருள்களையும் காப்பாற்றும் தீயணைப்பு வீரர்களுடன், நீர், நுரை, ஏணி மற்றும் சில தீயணைப்பு உபகரணங்கள் இருக்கும். தீவிபத்தைத் தவிர மற்ற அவசரக்காலங்களில் கூட உதவும்.

சமுத்ரா: அம்மா **தீயணைப்பு வீரர்கள்** பற்றி கூறுங்கள். அவர்கள் தீயைக் கண்டு பயப்படமாட்டார்களா?

அம்மா: **தீயணைப்பு வீரர்கள்** அதற்கென்று பயிற்சி பெற்று இருப்பார்கள். அவர்கள் பாதுகாப்பு கவசம் அணிந்திருப்பார்கள். பாதிக்கப்பட்ட இடத்தில் தண்ணீர்க் கொண்டு அணைப்பார்கள். மக்களையும், பொருள்களையும் பாதுகாப்பான இடத்தில் சேர்ப்பார்கள்.

சமுத்ரா: அவர்கள், தீக்காயம் அடைந்தவர்களை எப்படிக் காப்பாற்றுவார்கள்?

அம்மா: அவர்களை உடனடியாக 'அவசர ஊர்தியில்' அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைப்பார்கள். அவசர ஊர்தியில் முதலுதவிக்கான அனைத்து உபகரணங்களும் இருக்கும். பாதிக்கப்பட்ட மக்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெறுவர்.






3rd_Social_Science_Unit_2.indd 134 2/19/2020 8:16:11 PM

## செயல்பாடு
### நாம் எழுதுவோம்

செவிலியர் என்பவர் மருத்துவருக்கு உதவியாக இருப்பவர். நோயாளிகளை அக்கறையுடன் கவனித்துக் கொள்பவர்.

செவிலியரின் பல்வேறு கடமைகளைப் பற்றி எழுதுக.




**சமுத்ரா:** யார் வேண்டுமானாலும் அந்த அவசர ஊர்தியில் செல்லலாமா?

**அம்மா:** அந்த அவசர ஊர்தியானது அவசர சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு மட்டும்தான்.

**சமுத்ரா:** அவசர சிகிச்சையா?

**அம்மா:** அவசர சிகிச்சை என்பது மிகவும் அபாயக்கட்டத்தில் இருப்பவர்களுக்கு, அதாவது நெஞ்சுவலி, மயக்கம், நடக்க இயலாமை, விபத்தில் சிக்கியோர் போன்றவர்களுக்கு அளிப்பது.



www.tntextbooks.in

**சமுத்ரா:** அந்த வாகனத்தில் எப்படி சிகிச்சை அளிப்பார்கள்?

**அம்மா:** அந்த வாகனத்தில் முதலுதவி மட்டும் அளிப்பார்கள்.

**சமுத்ரா:** முதலுதவியா?

**அம்மா:** **முதலுதவி** என்பது முறையான சிகிச்சைக்கு முன் அளிக்கப்படும் உயிர் காக்கும் உதவி. அந்த வாகனத்தில் மருத்துவர், செவிலியர் மற்றும் முதலுதவி உபகரணங்கள் மற்றும் மருந்துகள் இருக்கும்.

ஒருவர் **அவசர ஊர்தி வாகனத்தை** எவ்வாறு தொடர்பு கொள்வர்?

நாம் அறிந்து கொள்வோம்.

### கைமாறு கருதாது பிறருக்கு உதவி செய்பவர்களின் சட்டம் (Good Samaritan Law)

கைமாறு கருதாது பிறருக்கு உதவி செய்பவர்களின் (Good Samaritan Law) சட்டத்தை மத்திய அரசு 2014–இல் உருவாக்கியது. இச்சட்டமானது விபத்தில் சிக்கியவர்களுக்கு உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்டது.

இச்சட்டத்தின்படி யார்வேண்டுமானாலும் விபத்தில் சிக்கியவர்களுடன் மருத்துமனைக்குச் செல்லலாம். அவர்களின் பெயரை மருத்துவமனையில் சிகிச்சைக்காகத் தெரிவிக்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. சிகிச்சைக்கான பணம் அளிக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. காவல்துறை மற்றும் இதர சட்ட விதிகளுக்குப் பயப்படாமல் எந்த ஒரு மனிதரும் தாமே முன்வந்து உதவி செய்ய இச்சட்டம் உதவுகிறது.

### சிந்தனை செய்






3rd_Social_Science_Unit_2.indd 136 2/19/2020 8:16:16 PM

**சமுத்ரா:** என்ன கட்டடம் அது?

**அம்மா:** அங்காடியை விரிவுபடுத்துவதற்கான கட்டடம் அது.

**சமுத்ரா:** எதற்காக கட்டடம் கட்டப்படுகிறது?

**அம்மா:** மக்களையும், வியாபாரிகளையும் சூரிய ஒளி மற்றும் மழைப் பொழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக கட்டப்படுகிறது.

**சமுத்ரா:** இக்கட்டடத்தை யார் கட்டினார்?

**அம்மா:** **கட்டடப் பொறியாளர்** கட்டினார். அவர் இக்கட்டடத்திற்கான திட்டவரைபடத்தையும், வடிவமைப்பினையும் உருவாக்கினார்.

**சமுத்ரா:** வீட்டிற்கான வடிவமைப்பையும் **கட்டடப் பொறியாளர்** உருவாக்குவாரா?

**அம்மா:** ஆம். கட்டடப் பொறியாளர் வீடுகள், பள்ளிகள், கல்லூரிகள், பாலங்கள், கோயில்கள், தொழிற்சாலைகள் மற்றும் உயரமான கட்டடங்கள் போன்றவற்றை வடிவமைக்கிறார். கட்டடப் பொறியாளர் தயாரித்த திட்டவரைபடத்தைப் பயன்படுத்தி கட்டடங்கள் கட்டப்படுகின்றன.

**சமுத்ரா:** ஓ! அப்படியா! அம்மா நாம் ஏன் இந்த மண் பாதையில் நடக்கிறோம்? இது நமது வழியல்லவே.



**அம்மா:** நம் வழக்கமான பாதையில் **சாலைத் தொழிலாளர்கள்** சாலை போடுகின்றனர்.

**சமுத்ரா:** சாலைகள் நமக்காகத்தான் போடப்படுகிறதா?

**அம்மா:** ஆமாம், **சாலைத் தொழிலாளர்கள்** வாகனங்கள் மற்றும் மக்கள் வசதியாக செல்ல சாலைகளைப் போடுகின்றனர்.

**சமுத்ரா,** இப்பக்கம் பார்!

**சமுத்ரா:** ஏன் அம்மா?.... என்ன சிறப்பு?

**அம்மா:** வயல்கள் பசுமையாக எவ்வளவு அழகாக உள்ளன!

**சமுத்ரா:** ஆம் அம்மா. மிகவும் அழகாக உள்ளன. அங்கு யார் வேலை செய்கிறார்கள் அம்மா?

**அம்மா:** அவர்கள் **விவசாயிகள்.** அவர்களால் தான் நாம் உணவு பெற்று, மகிழ்ச்சியாக வாழ்கிறோம்.



## செயல்பாடு
நாம் எழுதுவோம்

### விடைகாண்க

1. எனக்கு முன்னே எனது மணியோசை வரும் தீயிலிருந்து உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாப்பேன்.
நான் யார்? ______________

குறிப்பு : ப்புயணைதீ வாம்கன

2. நான் மக்களை பாதுகாப்பேன். குற்றங்களிலிருந்து சமூகத்தைப் பாதுகாப்பேன். மக்கள் விதிகளைப் பின்பற்றுகிறார்களா என உறுதிப்படுத்துவேன்.
நான் யார்? ______________

குறிப்பு : லவர்கா

3. நான் மண்ணில் கடுமையாக உழைப்பேன். விதைப்பேன். ஆதலால் அம்மண் நமக்கு உணவு தரும்.
நான் யார்? ______________

குறிப்பு : விசாவயி

**சமுத்ரா:** அம்மா, அங்கே பாருங்கள் பேருந்து!

**அம்மா:** பேருந்து நமது போக்குவரத்துச் சேவைகளில் ஒன்று.**தீயணைப்புவீரர்கள்,விவசாயிகள்,பொறியாளர்கள்** போன்று **ஓட்டுநர்கள்** மற்றும் **நடத்துனர்களின்** சேவை மிகவும் மகத்துவமானது. அவர்கள்தான் போக்குவரத்து எளிதாக நடைபெற உதவுகிறார்கள்.

**சமுத்ரா:** அம்மா, ஏதோ ஒரு வித்தியாசமான எச்சரிக்கை ஒலி கேட்கிறதே?

**அம்மா:** ஆம். அது காவல்துறை வாகனத்தின் எச்சரிக்கை ஒலி.

சமுத்ரா: காவல்துறை வாகனமா ஏன்?

அம்மா: இது காவல்துறையின் வழக்கமான ரோந்து பணி, மக்களைப் பாதுகாக்கவும், கூட்டநெரிசலை ஒழுங்குபடுத்தவும் வருகிறார்கள். மக்களையும், பொருள்களையும் பாதுகாப்பார்கள். அனைவரும் விதிமுறைகளைப் பின்பற்றுகிறார்களா என உறுதிப்படுத்துவார்கள்.


சமுத்ரா: அம்மா....

அம்மா: என்ன?


சமுத்ரா: நம் அண்டை வீட்டு அண்ணா, நம் நாட்டு எல்லையில் வேலை செய்கிறார் என்று சொன்னீர்களே!..

அம்மா: அவர் **இராணுவ வீரராக** இந்திய எல்லையில் பணிபுரிகிறார். **இராணுவ வீரர்கள்** நம் நாட்டையும், மக்களையும் எதிரிகளிடமிருந்து பாதுகாக்கின்றனர். தமது உயிரைக்கூடப் பொருட்படுத்தாமல் அவர்கள் நமக்காக குடும்பங்களைத் துறந்து பணிபுரிகிறார்கள்.

**நாம் அறிந்து கொள்வோம்.**



இந்திய தேசிய இராணுவத்தை, **நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்** உருவாக்கினார்.



www.tntextbooks.in

சமுத்ரா: எனக்கு இப்பொழுது நினைவுக்கு வருகிறது. எங்களின் ஆசிரியர் நேற்று இராணுவப்படையைப் பற்றிக் கூறினார்.

அம்மா: சமுத்ரா உனக்குத் தெரியுமா? ஆசிரியர்களின் பணி மிகவும் புனிதமானது. அவர்கள் மாணவர்களுக்கு அறிவையும், ஒழுக்கத்தையும் போதித்து (Enlightens) சிறந்த குடிமக்களாகத் திகழ உதவி புரிகிறார்கள்.


செல்லமே நாம், பிரதான சாலைக்குவந்துவிட்டோம். என் கையைப் பிடித்துக் கொள்.

## செயல்பாடு

### நான் யார்?

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1 (தையல்காரர்)



அ) நான் துணிகளைத் __________

ஆ) நான் ஒரு __________

2 (வண்ணம் தீட்டுபவர்)



அ) நான் சுவரில் __________

ஆ) நான் ஒரு __________

3 (குழாய் செப்பனிடுபவர்)



அ) நான் குழாய்களை __________

ஆ) நான் ஒரு__________


4 (காவலாளி)



அ) நான் வீடுகளையும் மக்களையும் __________

ஆ) நான் ஒரு__________

5 (மின் அமைவு செப்பனிடுபவர்)



அ) நான் மின் சாதனங்களைப் __________

ஆ) நான் ஒரு__________



3rd_Social_Science_Unit_2.indd 141 2/19/2020 8:16:29 PM

சமுத்ரா: அம்மா, சாலையின் நடுவே நிற்பது யார்?

அம்மா: ஓ! அவர்தான் **போக்குவரத்துக் காவலர்.**

சமுத்ரா: அவர் அங்கு ஏன் நிற்கிறார்?

அம்மா: அவரின் பணி மிகவும் முக்கியமானது. அவர்தான் வாகனங்களைக் கட்டுப்படுத்தி சரியான திசையில் செல்லுமாறு அறிவுறுத்துவார்.பாதசாரிகளைப் பாதுகாப்பார் (Protect).


சமுத்ரா: அம்மா, அந்த உயரமான கட்டடம் என்ன கட்டடம் அம்மா?

அம்மா: அதுதான் **நீதிமன்றம்.**

சமுத்ரா: நீதிமன்றம் என்றால் என்ன?

அம்மா: அனைத்து வகையான பிரச்சனைகளுக்கும் சட்டப்படி தீர்வுகாணும் இடமாகும். **நீதிபதி** மக்களுக்குச் சரியான தீர்ப்பு வழங்குவார். நமது உரிமைகளைப் பாதுகாப்பார்.

சமுத்ரா: அம்மா, எனக்கு இப்பொழுதுதான் புரிகிறது. இத்தனை மனிதர்களும் நமக்காக பணிபுரிகிறார்கள். எனக்கு இவர்களை நினைத்துப் பெருமையாக உள்ளது.



**நாம் அறிந்து கொள்வோம்.**

நமது **அரசியல் அமைப்பின் பாதுகாவலன்** (guardian) **உச்சநீதிமன்றம்** ஆகும்.

**அம்மா:** **சமுத்ரா,** நீ என்னவாக வேண்டும் என விரும்புகிறாய்? உனக்கு ஏதேனும் ஆசை உள்ளதா?

**சமுத்ரா:** எனக்கு ஒரு ஆசை உள்ளது. நான் நன்றாக படித்து நல்ல வேலையைத் தேடவேண்டும்என விரும்புகிறேன். அதே நேரத்தில் நான் நமது தோட்டத்தையும், வயலையும் பராமரிப்பேன்.

**அம்மா:** நாம் வீட்டிற்கு வந்துவிட்டோம். செல்லமே..... கதவைத் திற.

### கலைச் சொற்கள்

| | | |
|---|---|---|
| **போதித்தல்** | : | Enlightens |
| **பாதுகாவலன்** | : | Guardian |
| **பாதுகாத்தல்** | : | Protect |



## மீள்பார்வை

- நமது நண்பர்களாகிய ஆசிரியர், மருத்துவர், பொறியாளர், காவல்காரர் போன்றோர் நமக்காகப் பணிபுரிகின்றனர்.
- தீயணைப்பு வீரர்கள் மக்களையும், உடைமைகளையும் தீயிலிருந்து காப்பாற்றுகின்றனர்.
- ஒரு கட்டடப்பொறியாளர் கட்டடத்திற்கு வடிவமைப்பினைத் தருகிறார்.
- சாலைப்பணியாளர்களால் சாலைகள் போடப்படுகின்றன.
- விவசாயிகளிடமிருந்து நாம் உணவைப் பெறுகிறோம்.
- இராணுவ வீரர்கள் நமது நாட்டைப் பாதுகாக்கின்றனர்.
- நமக்காகவும், நமது நாட்டிற்காகவும் சேவை செய்யும் மக்களை எண்ணி பெருமைக் கொள்வோம்.

www.tntextbooks.in



# மதிப்பீடு



**I. அடைப்புக் குறியிலிருந்து சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

(சாலை, நீதிபதி, முதலுதவி, ஆசிரியர், மருத்துவர்)

1. முறையான சிகிச்சைக்கு முன் அளிப்பது____________.
2. செவிலியர் ___________ க்கு உதவி புரிவார்.
3. மக்கள் வழக்குகளுக்கு தீர்ப்பு சொல்லுபவர் ____________.
4. நமக்கு அறிவை மேம்படுத்துபவர்___________.
5. சாலைப்பணியாளர்கள்____________ போடுகின்றனர்.

**II. சரியா / தவறா என்று எழுதுக.**

1. தையல்காரர் என்பவர் துணி தைப்பவர். (   )
2. மின்பழுது செய்பவர், குழாய்களைச் சரிசெய்வார். (   )
3. போக்குவரத்துக் காவலர் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவார். (   )
4. மருத்துவர் மக்களையும், உடைமைகளையும் காப்பாற்றுவார். (   )
5. உச்சநீதிமன்றம் நமது அரசியல் அமைப்பின் பாதுகாவலன்.(   )

**III. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

1. நமக்கு சேவை புரிபவர்கள் சிலரைக் குறிப்பிடுக.
2. தீயணைப்பு வீரர்கள் என்பவர்கள் யார்?
3. ஒரு கட்டடப்பொறியாளரின் பணி யாது?
4. விவசாயிகள் பற்றி எழுதுக.
5. இராணுவ வீரர்கள் நமது நாட்டை எவ்வாறு பாதுகாப்பார்கள்?



3rd_Social_Science_Unit_2.indd 144 2/19/2020 8:16:32 PM

www.tntextbooks.in

செயல்பாடு

# செயல் திட்டம்

சமூக பணியாளர்களுடன் அவர்களின் உபகரணங்களைப் பொருத்தி, அவர்களின் பணியை எழுதுக.

1) 

அ)  ____________

2) 

ஆ) 

____________

3) 

இ)  ____________

4) 

ஈ)  ____________



3rd_Social_Science_Unit_2.indd 145 2/19/2020 8:16:35 PM

www.tntextbooks.in

# அலகு 3 ஊராட்சி மன்றம்



## கற்றல் நோக்கங்கள்

- ஊராட்சி மன்றம் பற்றி அறிந்துகொள்ளல்.
- ஊராட்சி மன்றம் கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகளை அளிக்கிறது என்பதனைத் தெரிந்துகொள்ளல்.
- கிராம சபையின் பணிகள் பற்றி தெரிந்துகொள்ளல்.
- உள்ளாட்சியைப் பற்றி தெரிந்துகொள்ளல்.







3rd_Social_Science_Unit_3.indd 146 2/19/2020 8:17:05 PM






3rd_Social_Science_Unit_3.indd 147 2/19/2020 8:17:06 PM

தண்டோரா அறிவிப்பைக் கேட்டு **இனியன்** வீட்டிற்கு ஓடுகிறான்.

**இனியன்:** அப்பா, தண்டோரா அறிவிப்பாளர் என்ன கூறினார்?

**தந்தை:** கிராம சபை கூட்டம் சுதந்திர தினத்தன்று கூட்டப்படும் என்று கூறினார்.

**இனியன்:** கிராம சபை கூட்டம் என்றால் என்ன? அவர்கள் அக்கூட்டத்தில் என்ன செய்வார்கள்?


**தந்தை:** மக்கள் கிராமத்தில் ஒன்றாகக் கூடி ஊராட்சி மன்றப் பணிகளைப் பற்றி விவாதிப்பர்.

**இனியன்:** அப்படியா! ஊராட்சி மன்றம் என்றால் என்ன?






3rd_Social_Science_Unit_3.indd 148 2/19/2020 8:17:06 PM



**தந்தை:** நீ கேட்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. நான் ஊராட்சி மன்றத்தைப்பற்றிக் கூறுகிறேன்.

நமது நாடு மிகவும் பெரிய நாடு. இதில் அதிக நகரங்களும், கிராமங்களும் உள்ளன. எனவே ஊராட்சி மன்றங்களும் அதிக அளவில் செயல்படுகின்றன. ஊராட்சி அமைப்பின் அடிப்படை கிராம ஊராட்சி ஆகும். இது கிராம மக்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்குகிறது. **73வது இந்திய அரசியலமைப்பு திருத்தச் சட்டம்** ஏப்ரல் 1993 இல் நடைமுறைக்கு வந்தது. **73வது இந்திய அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின்** முக்கிய அம்சம் பஞ்சாயத்து ராஜ்ஜின் **மூன்றடுக்கு பஞ்சாயத்து முறையாகும்.** ஒவ்வொரு கிராம ஊராட்சியும் 500 மற்றும் 500க்கு மேற்பட்ட மக்களைக் கொண்டிருக்கும்.






**இனியன்:** அப்பா, கிராம ஊராட்சியில் யாரெல்லாம் உறுப்பினர்களாக இருப்பார்கள்?

நாம் அறிந்து கொள்வோம்.

12,620 கிராம ஊராட்சிகள் தமிழ்நாட்டில் உள்ளன.






3rd_Social_Science_Unit_3.indd 149 2/19/2020 8:17:07 PM



**தந்தை:** **தலைவர், துணைத்தலைவர்** மற்றும் **வார்டு உறுப்பினர்கள்** (6 லிருந்து 15 வரை) இருப்பார்கள்.



**இனியன்:** ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?



**தந்தை:** கிராம மக்கள் ஊராட்சி மன்றத் தலைவரையும், உறுப்பினர்களையும் நேரடித் **தேர்தல்** மூலம் தேர்ந்தெடுப்பர். ஊராட்சி மன்றத் துணைத் தலைவரை வார்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பர். அவர்களின் பதவிக்காலம் **ஐந்து ஆண்டுகள்** ஆகும்.

## செயல்பாடு
### விடையளிப்போம்

1. உங்கள் கிராம பஞ்சாயத்துத் தலைவரின் பெயரை எழுதுக.

_______________________________________________

2. உங்கள் கிராம பஞ்சாயத்தில் எத்தனை வார்டு உறுப்பினர்கள் உள்ளனர்?


_______________________________________________



நாம் அறிந்து கொள்வோம்.

சோழ அரசு **குடவோலை** முறையின் மூலம் கிராம நிர்வாகத்திற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர் என்பதைக் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள **உத்திரமேரூர்** கல்வெட்டுகள் மூலம் அறிந்துக்கொள்கின்றோம்.

**குடவோலை** என்பது நமது பாரம்பரிய தேர்தல் முறை.



கிராம மக்கள் ஒன்று கூடி அவர்களுக்கு விருப்பமானவர்களின் பெயர்களைப் பனை ஓலைகளில் எழுதி, **குடத்திற்குள்** போடுவார்கள். ஒரு சிறுவனை அழைத்து பனை ஓலைகளை ஒவ்வொன்றாக எடுக்கச் செய்வர். பனை ஓலைகளில் எத்தனை நபர்களின் பெயர்கள் உள்ளனவோ, அவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்படுவர்.



## செயல்பாடு

### நாம் எழுதுவோம்

உங்கள் வகுப்பில், வகுப்பு தலைவரைக் **குடவோலை** முறையின் மூலம் தேர்ந்தெடுக்க.

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________



3rd_Social_Science_Unit_3.indd 151 2/19/2020 8:17:15 PM




**இனியன்:** அப்பா, இம்மன்ற உறுப்பினர்களின் பணி என்ன?

**தந்தை:** மக்களுக்கு அடிப்படை வசதிகளை அளிப்பது அவர்களின் முக்கியப் பணியாகும்.

**ஊராட்சி மன்றத்தால் செயல்படுத்தப்படும் கட்டாயப்பணிகள் ( Obligatory functions):**

1. மின்சாரம் வழங்குவது மற்றும் தெருவிளக்குகளைப் பராமரித்தல்.
2. பொதுக் கிணறு பராமரித்தல்.
3. குடிநீர் வழங்குவது.
4. சாலைகள் போடுவது மற்றும் பராமரித்தல்.
5. கழிவுநீர்க் கால்வாய்களை ஏற்படுத்துதல்.
6. சிறிய பாலங்களைக் கட்டுதல்.
7. தொடக்கப்பள்ளி கட்டடங்களைப் பழுதுபார்த்தல்.
8. சுகாதார வசதிகளை அளித்தல்.







**இனியன்:** அப்பா, அவர்கள் அதிகமாகப் பணிகளைப் புரிகின்றனர். அதற்கு அதிக பணம் தேவைப்படும் அல்லவா?



**கிராம சுவராஜ்** என்ற வார்த்தை முதன்முதலில் **மகாத்மா காந்தியால்** அறிமுகப்படுத்தப்பட்டது.






www.tntextbooks.in

**தந்தை:** ஆம், மத்திய மற்றும் மாநில அரசாங்கம் கிராம ஊராட்சிக்குத் தேவையான நிதியை வழங்கும். அவர்கள்அந்நிதியை கிராம வளர்ச்சிக்காக பயன்படுத்துவர். நாம் ஊராட்சி மன்றத்திற்கு வரி செலுத்துகிறோம். **வரி வசூலிப்பது** கிராம ஊராட்சி மன்றத்தின் முக்கியப் பணியாகும்.

அவர்கள் சில **தன்னார்வப்பணிகளை** (Discretionary function) மேற்கொள்வர்.



1. சாலைகளின் ஓரங்களில் மரம் நடுதல்.
2. பொது அங்காடிகளை அமைத்தல்.
3. பூங்காக்களை ஏற்படுத்துதல்
4. தங்கும் விடுதிகளை உருவாக்குதல்.
5. விளையாட்டு மைதானங்களை உருவாக்குதல்.
6. நூலகங்களை உருவாக்குதல்.
7. முதியோர்களுக்கான கல்வி நிலையங்களை ஏற்படுத்துதல்.
8. கிராம விழாக்களைக் கொண்டாடுதல்.
9. கிராமத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ளுதல்.



1. உனது கிராமத்தில் நூலகம் உள்ளதா?
2. உனது கிராமத்தில் பூங்கா உள்ளதா?
3. உனது கிராமத்தில் விளையாட்டு மைதானம் உள்ளதா?






3rd_Social_Science_Unit_3.indd 153 2/19/2020 8:17:22 PM


**சிறந்த பஞ்சாயத்து விருது பெற்ற கிராமம்**

### வியக்க வைக்கும் கிராமம்

கோயம்புத்தூரில் உள்ள ஒடந்துறை ஊராட்சியில் 850 வீடுகள் இலவசமாக கட்டித்தரப்பட்டுள்ளன. அவ்வூராட்சி அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்துள்ளது.

இந்த கிராமம் கீழ்க்கண்ட **விருதுகளைப்** பெற்றுள்ளது.

1. **நிர்மல் புரஸ்கார் விருது**
2. **பாரத ரத்னா ராஜீவ்காந்தி சுற்றுச்சூழல் விருது**







**இனியன்:** அப்பா.... நாளை நடைபெறும் கிராம சபை கூட்டத்திற்கு நீங்கள் செல்வீர்களா?

**தந்தை:** கண்டிப்பாக நான் செல்வேன். கிராம சபை கூட்டத்தில் பங்கு பெறுவது முக்கியம். கிராம சபை கூட்டத்தில் கிராம வளர்ச்சிக்கான பணிகளைப் பற்றி விவாதிப்போம்.



**நாம் அறிந்து கொள்வோம்.**

**கிராம சபை** மக்களாட்சியின் அடிப்படையாக விளங்குகிறது.



கிராம சபை கூட்டம் வருடத்திற்கு குறைந்தபட்சம் **நான்கு முறை** கூட்ட வேண்டும்.

கிராம சபை கூட்டம் நடைபெறும் நாட்கள்:

| | |
|---|---|
| **ஜனவரி 26** | (குடியரசு தினம்) |
| **மே 1** | (தொழிலாளர் தினம்) |
| **ஆகஸ்ட் 15** | (சுதந்திர தினம்) |
| **அக்டோபர் 2** | (காந்தி ஜெயந்தி) |



3rd_Social_Science_Unit_3.indd 154 2/19/2020 8:17:24 PM

### கிராம சபையின் பணிகள்

1. வளர்ச்சிப் பணிகளைத் திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல் (Executing).
2. கிராம வரவு–செலவுகளைக் கண்காணித்தல்.
3. மக்களின் குறைகளைத் தீர்த்து வைத்தல்.

## நகராட்சி

கிராம ஊராட்சி போன்றே நகராட்சியும் செயல்படுகிறது. **நகராட்சி** 5,000 முதல் 30,000 வரை மக்கள் தொகையைக் கொண்டுள்ளது. நகர மன்றத் தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் **ஐந்து வருடங்கள்** ஆகும். நகரத்திலுள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்திச்செய்வது நகரமன்றத்தின் பணி ஆகும்.

### கலைச் சொற்கள்

| | |
|---|---|
| **தன்னார்வப்பணி** | : Discretionary function |
| **செயல்படுத்துதல்** | : Executing |
| **கட்டாயப்பணி** | : Obligatory function |



## மீள்பார்வை

- ஊராட்சி மன்றம் மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை அளிக்கிறது.
- பஞ்சாயத்து ராஜ் என்பது மூன்றடுக்குப் பஞ்சாயத்து முறை ஆகும்.
- வரி வசூலிப்பது ஊராட்சி மன்றத்தின் முக்கிய பணியாகும்.
- கிராம சபை கூட்டம் வருடத்திற்கு நான்கு முறை கூடவேண்டும்.
- கிராம ஊராட்சிப் போன்றே நகராட்சியும் செயல்படுகிறது.



3rd_Social_Science_Unit_3.indd 155 2/19/2020 8:17:25 PM



# மதிப்பீடு



## I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. ஊராட்சி என்பது ______________ அரசில் அடங்கும்.

அ) மாவட்டம் ஆ) மாநிலம் இ) கிராமம்

2. 'கிராம சுவராஜ்' என்ற வார்த்தையை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர்______________.

அ) காமராசர் ஆ) மகாத்மா காந்தி இ) நேரு

3. மூன்றடுக்கு முறையின் அடிப்படை______________ ஊராட்சி ஆகும்.

அ) மாவட்டம் ஆ) வட்டாரம் இ) கிராமம்

4. ஊராட்சிமன்றத் துணைத்தலைவர் யாரால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்?

அ) மக்கள் ஆ) வார்டு உறுப்பினர்கள் இ) மாவட்ட ஆட்சியர்

5. கிராம சபை உறுப்பினர் பணிக்காலம்______________.

அ) 15 ஆண்டுகள் ஆ) 10 ஆண்டுகள் இ) 5 ஆண்டுகள்

## II. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. குடவோலை | - | வளர்ச்சித்திட்டம் |
| 2. ஊராட்சி மன்றம் | - | கட்டாயப்பணி |
| 3. மரம் நடுதல் | - | பாரம்பரிய தேர்தல் முறை |
| 4. தெருவிளக்கு | - | தன்னார்வப்பணி |
| 5. கிராம சபை | - | 500க்கு மேற்பட்ட மக்கள் தொகை |



3rd_Social_Science_Unit_3.indd 156 2/19/2020 8:17:28 PM

## III. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

1. ஊராட்சி மன்றம் என்றால் என்ன?
2. குறிப்பு வரைக : 'மூன்றடுக்குப் பஞ்சாயத்து முறை'. பிரமீடு வரைக.
3. ஊராட்சியின் கட்டாயப்பணிகளில் மூன்றினை எழுதுக.
4. ஊராட்சியின் தன்னார்வப்பணிகளில் மூன்றினை எழுதுக.
5. கிராம சபைக் கூட்டம் எப்பொழுது நடைபெறும்?

செயல்பாடு

## செயல் திட்டம்

**உங்கள் பஞ்சாயத்தில் இருந்து கிடைக்கும் வசதிகளைப் பற்றி எழுதுக.**

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________




3rd_Social_Science_Unit_3.indd 157 2/19/2020 8:17:29 PM

# அலகு 4 பாதுகாப்பு

## கற்றல் நோக்கங்கள்

- விபத்துகளை தவிர்ப்பதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி அறிந்துகொள்ளல்.
- தீயிலிருந்து பாதுகாக்கும் முறைப்பற்றி அறிந்துகொள்ளல்.
- சாலைப்பாதுகாப்பு குறித்துத் தெரிந்துகொள்ளல்.
- நீர் பாதுகாப்பு குறித்துப் புரிந்துகொள்ளல்.
- மின்சாரப் பாதுகாப்பு குறித்து அறிந்துகொள்ளல்.




நமது வாழ்க்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. வீடு, பள்ளி, சாலை மற்றும் இதர இடங்களில் விபத்துகள் நடைபெறக்கூடும். நாம் முன்னெச்சரிக்கையாக இருந்தால் விபத்துகளைத் தவிர்க்கலாம். பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பற்றி அறிந்து கொண்டு அவற்றைப் பின்பற்றினால் பாதுகாப்பாக வாழலாம்.

## விபத்திற்கானக் காரணங்கள்




- அவசரம்
- கவனக்குறைவு
- விழிப்புணர்வு இன்மை
- வெறுப்பு
- விதிகளை மீறுதல்
- முறையான பயிற்சி இன்மை
- பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றாது இருத்தல்


நம் வாழ்க்கையில் விபத்துகள் **தீ, நீர், வாகனங்கள், மின்சாரம், விஷப்பூச்சிகள், கூர்மையான ஆயுதங்கள்** மற்றும் **கண்ணாடி பொருள்கள்** போன்றவற்றின் மூலம் ஏற்படலாம்.



தீ




நீர்



மின்சாரம்




வாகனங்கள்



விஷப்பூச்சிகள்



பூச்சிக் கொல்லிகள்



கூர்மையான ஆயுதங்கள் மற்றும் கண்ணாடி பொருள்கள்


# தீ பாதுகாப்பு

## தீ என்பது மனிதனின் அற்புத படைப்பு


- தீயினால் பொருள்களை உருவாக்கவும், அழிக்கவும் முடியும்.
- தீ நம் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு வழிகளில் பயன்படுகிறது. நாம் அதை கவனமாக கையாளவேண்டும்.

## தீ விபத்திற்கான காரணங்கள்

கீழ்க்காணும் வழிகளில் **தீ விபத்து** நேரலாம்.



வெடிப்பொருள்கள்



குறைந்த மின்னழுத்தம்



எரிவாயு கசிவு




எளிதில் தீப்பிடிக்கக் கூடியப் பொருள்கள்



**காட்டுத் தீ** எவ்வாறு உருவாகிறது?

### தீ விபத்திற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

1. எளிதில் தீப்பிடிக்கக்கூடிய பொருள்களைக் கவனமாக கையாளவேண்டும்.
2. சமையல் செய்பவர் பருத்தி ஆடைகளை அணியவேண்டும்.
3. சமைத்தப்பின் எரிவாயு உருளை அடைப்பானை மூடிவிடவேண்டும். எரிவாயு உருளைகளில் கசிவு இருப்பதைக் கண்டறிந்தால், உடனே வீட்டை காற்றோட்டப்படுத்த கதவுகளையும், சன்னல்களையும் திறக்க வேண்டும்.
4. நெருப்புடன் விளையாடக்கூடாது.
5. நாம் வெடி வெடிக்கும்பொழுது, பெரியவர்களுடன் சேர்ந்து கவனமாக வெடிக்கவேண்டும்.

**சிந்தனை செய்**



தீ அணைப்பானை நீ
எங்கேயாவது கண்டதுண்டா?



## தீ விபத்தின்பொழுது என்ன செய்யவேண்டும்?

1. தீ அணைப்பானைப் பயன்படுத்தவேண்டும்.
2. கட்டடத்தில் உள்ள எச்சரிக்கை மணியை ஒலிக்கச் செய்யவேண்டும்.
3. புகை பரவும்பொழுது மூக்கு மற்றும் வாயை ஈரத்துணியால் மூடிக் கொள்ள வேண்டும்.
4. எவர் உடம்பிலாவது தீப்பற்றினால் சணல் பைகளைக் கொண்டு தீயை அணைக்கவேண்டும். தீக்காயம் அடைந்தவரை காற்றோட்டமான இடத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

**உனது உடையில் தீப்பற்றினால்,**

- ஓடக்கூடாது.
- ஓடினால் எளிதில் தீ பரவும்.
- கீழே படுத்துப் புரளவேண்டும்.



**நாம் அறிந்து கொள்வோம்.**

தீ விபத்து நடந்தால் 101 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவேண்டும்

## நீ என்ன செய்யக்கூடாது ?

உன் தோலில் தீக்காயம் இருந்தால்,

- மை அல்லது காபி தூளை தீக்காயத்தில் வைக்கக் கூடாது.
- தீப் புண்ணை ஊசிக்கொண்டு குத்தக்கூடாது. அவ்வாறு குத்தினால் அது பாதிப்பை உண்டாக்கும்.

**செயல்பாடு**
**நாம் எழுதுவோம்**

**தீ நம் அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு உதவுகிறது?**

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

# நீர் பாதுகாப்பு

**நீர் நமது வாழ்வின் திரவ அமுதம் (Elixir) ஆகும்**

நம் வாழ்வில் நீர் மிகவும் முக்கியமானது.

ஏரி, ஆறு, நீர்வீழ்ச்சி, கடல் மற்றும் குளம் போன்றவற்றில் நாம் விதிமுறைகளை மீறி குளித்தால் விபத்துகள் நேரும்.




ஆறு அல்லது ஏரியில் நீ குளித்திருக்கிறாயா?
ஆம் என்றால், யாருடன் சென்று குளித்தாய்?

**நாம் அறிந்து கொள்வோம்.**

குளம் அல்லது ஆற்றில் குளிப்பதற்கு நாம் பெரியவர்களுடன் செல்லவேண்டும். நீச்சல் தெரிந்தால் மட்டுமே அங்குச் சென்று குளிக்கவேண்டும்.

**முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:**

1 தனியாக நீர்நிலைகளுக்கு குளிக்கச் செல்லக்கூடாது.



2 தேங்கியுள்ள குளத்தில் இறங்கக்கூடாது.




3 நீர்நிலைகளில் உள்ள அபாய எல்லைக்குச் செல்லக்கூடாது.



4 கிணற்றை எட்டிப்பார்க்கக் கூடாது. கிணறு ஆழமாக இருக்கக்கூடும்.



5 நீரில் பயணம் செய்யும்பொழுது பாதுகாப்பு கவசத்தை அணிய வேண்டும்.



3rd_Social_Science_Unit_4.indd 162 2/19/2020 8:18:30 PM

# மின்சாரப் பாதுகாப்பு

மின்சாரம் நமது வாழ்வின் முக்கிய தேவையாகி விட்டது. மின்சாரம் இன்றி எந்தப் பொருளும் இயங்காது என்ற நிலைக்கு காலம் நம்மை மாற்றிவிட்டது. வீடுகள், தொழிற்சாலைகள், மற்றும் இதர இடங்களில் மின்சாரம் பயன்படுகிறது. கவனக்குறைவாக கையாண்டால் மின்விபத்து ஏற்படும்.



## முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:

1. மின்பொத்தான்களையும், மின்கம்பிகளையும் ஈரமான கையால் தொடக்கூடாது.
2. சலவைப்பெட்டி மற்றும் இதர மின்சாதனங்களை மின் இணைப்பில் இருக்கும்பொழுது தொடக்கூடாது.
3. மின்மாற்றி மற்றும் மின்கோபுரங்கள் அருகில் விளையாடக்கூடாது.
4. மின்கம்பத்தின் மேலே ஏறக்கூடாது.
5. மின்பொத்தான் பெட்டியில் குச்சி போன்ற பொருள்களை நுழைக்கக்கூடாது.
6. மின்கம்பிகள் மற்றும் மின்கம்பங்கள் அருகில் விளையாடக் கூடாது.







**செயல்பாடு**
நாம் எழுதுவோம்

**உனது வீட்டில் பயன்படுத்தப்படும் மின்சாதனங்களைப் பட்டியலிடுக:**

________________________________

________________________________

________________________________


**நாம் அறிந்து கொள்வோம்.**

குறைந்த மின்னழுத்தத்தால் விபத்து நேரும் பொழுது தண்ணீர்க் கொண்டு தீயை அணைக்கக்கூடாது.

www.tntextbooks.in

# சாலைப் பாதுகாப்பு

சாலையில் நாம் கவனமாக நடக்கவேண்டும். வாகனங்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. கவனக்குறைவினால் அதிக விபத்துகள் நேரிடுகிறது.



## சாலைப் போக்குவரத்து விளக்கு (Traffic signal)



| | |
|---|---|
| சிவப்பு | நில் |
| மஞ்சள் | கவனி |
| பச்சை | செல் |

**விபத்துகளைத் தவிர்க்க,**

- சாலை விதிகளைப் பின்பற்ற வேண்டும்.
- சாலைப் போக்குவரத்துக் குறியீடுகளை நாம் பின்பற்ற வேண்டும்.
- சாலையில் வேகமாக செல்லக்கூடாது.
- காரில் (மகிழுந்து) பயணம் செய்யும்போது, இருக்கைப்பட்டையை அணியவேண்டும்.
- இருசக்கர வாகனத்தில் செல்லும்பொழுது, தலைக்கவசம் அணியவேண்டும்.




3rd_Social_Science_Unit_4.indd 164 2/19/2020 8:18:37 PM

www.tntextbooks.in

### சாலையில் செல்லும்பொழுது

- நடைபாதையில் நடக்கவேண்டும்.
- சாலையில் விளையாடக்கூடாது.
- சாலை விளக்கில் இருந்து வரும் வண்ணத்தை நாம் கவனித்து சாலையைக் கடக்கவேண்டும்.

## பாதசாரிகளுக்கான சாலைக்குறியீடுகள் (Traffic Signs)



சிவப்பு → நில்

பச்சை → செல்



### சிந்தனை செய்

1. நீ இச்சாலைக் குறியீடுகளைக் கவனித்திருக்கிறாயா?
2. நீ எங்குப் பார்த்திருக்கிறாய்?

**நாம் அறிந்து கொள்வோம்.**

சாலைப் போக்குவரத்து விளக்கு (Traffic signal) இல்லாத இடத்தில் நாம் முதலில் வலப்பக்கம் திரும்பி, பிறகு இடப்பக்கம் திரும்பி, பிறகு வலப்பக்கம் பார்த்து கடக்க வேண்டும்



3rd_Social_Science_Unit_4.indd 165 2/19/2020 8:18:52 PM

## பாதசாரிகள் கடக்கும் இடம்

பாதசாரிகள் கடக்கும் இடத்தில் மட்டுமே பாதசாரிகள் கடக்கவேண்டும்.

பாதசாரிகள் கடக்கும் இடம் **வரிக்குதிரைப்போன்று** கருப்பு மற்றும் வெள்ளைக்கோடுகளுடன் காணப்படும்.



**செயல்பாடு**
நாம் எழுதுவோம்

**விழிப்புணர்வு குறித்த வாசகங்களை எழுதுக.**

## போக்குவரத்துப் பூங்கா

போக்குவரத்துப் பூங்காவில் சாலைவிதிகளை நாம் கற்றுக்கொள்ளலாம். பள்ளிக் குழந்தைகள் மத்தியில், போக்குவரத்துப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மேம்படுத்துவது இப்பூங்காவின் நோக்கங்களில் (Intention) ஒன்றாகும். இப்பூங்கா சாலையைப் பற்றிய விழிப்புணர்வை (Awareness) நமக்கு அளிக்கும்.



**சென்னையில்** அண்ணா சதுக்கம் அருகில் **போக்குவரத்துப் பூங்கா** உள்ளது.



தலைக்கவசம் அணிவோம்.
உயிரைக் காப்போம்.



நாம் **போக்குவரத்து விதிகளைப்** பின்பற்றுவோம்!

## பூச்சிக்கொல்லி மருந்துகளிடமிருந்து பாதுகாப்பு

நமது வீட்டில் **பூச்சிக்கொல்லி மருந்துகளை,** பூச்சிகளைக் கொல்ல பயன்படுத்துகிறோம். அந்த மருந்துகள் மிகவும் அபாயகரமானது. அவற்றை நாம் தொடக்கூடாது.




### விஷப்பூச்சிகளால் உண்டாகும் அபாயங்கள்

**அறிகுறிகள்:**

- தோலில் அரிப்பு மற்றும் சிவப்பு நிறத்தை ஏற்படுத்தும்.
- வீக்கத்தை ஏற்படுத்தும். (கண் இமை, காது, வாய் போன்ற இடங்களில் வீக்கத்தை உருவாக்கும்.)
- தலைவலி, மயக்கம் மற்றும் வாந்தியை ஏற்படுத்தும்.

**பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் முதலுதவி அளித்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவேண்டும்.**


பாம்பு


தேள்


சிலந்தி

### முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

- புதருக்கு அருகே செல்லக்கூடாது.
- வீடு மற்றும் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும்.


குளவி

**நாம் அறிந்து கொள்வோம்.**

வயலில் வேலை செய்பவர்கள் நல்லெண்ணெய், பாரபின் எண்ணெய்யைத் தேய்த்துக்கொண்டு வேலை செய்வார்கள். அதனால் பூச்சிகள் அவர்களை கடிக்காது.

# கூர்மையான ஆயுதம் மற்றும் கண்ணாடிப்பொருள்கள்

- கூர்மையான ஆயுதம் மற்றும் கண்ணாடிப்பொருள்களைக் கவனமாகக் கையாளவேண்டும்.
- ஏனெனில் அது காயங்களை ஏற்படுத்தும்.





## கலைச் சொற்கள்

| | |
|---|---|
| திரவ அமுதம் | : Elixir |
| நோக்கம் | : Intention |
| விலைமதிப்பற்றது | : Precious |



## மீள்பார்வை

- நமது உயிர் விலைமதிப்பற்றது (Precious). நாம் மகிழ்ச்சியாக வாழவேண்டுமென்றால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றவேண்டும்.
- நாம் பாதுகாப்பு விதிகளைப் பின்பற்றி மகிழ்ச்சியுடன் வாழ்வோம்.

www.tntextbooks.in



# மதிப்பீடு



**I. கீழ்க்காணும் விடைகளிலிருந்து சரியானவற்றைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**(நீர், பாம்பு, சாலைப் போக்குவரத்து விளக்கு, மின்சாரம், தீ)**

1. தொட்டால், அது சுடும்.
   விட்டால், அது எரியும். அது என்ன? --------
2. நான் அன்றாடம் பயன்படுத்துவேன்.
   அதனை மழைநேரங்களில் காண்பேன். அது என்ன?--------
3. கம்பிகளின் வழியே செல்வேன். ஆனால் நான் கொடி அல்ல.
   நான் விளக்குகள் எரிய உதவுவேன். நான் யார்?--------
4. அவன் கால்கள் இல்லாமல், காடுகளில் உலாவுவான்.
   அவன் யார்? --------
5. சாலையில் நின்று நம்மை வழி நடத்துவான். அவனுக்கு மூன்று கண்கள் உண்டு. அவன் யார்? --------

**II. சரியா? தவறா என்று எழுதுக.**

1. நாம் சமையல் அறையில் விளையாடக்கூடாது. (          )
2. ஆற்றில் ஆழமான பகுதிக்குச் செல்லலாம். (          )
3. நாம் மின்சாதனங்களை ஈரமானக் கையால் தொடக்கூடாது. (          )
4. நாம் நமது வீட்டையும், சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ளவேண்டும். (          )
5. நாம் கண்ணாடிப் பொருள்களை வைத்து விளையாடலாம். (          )

**III. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.**

1. விபத்து நேர்வதற்கான காரணங்கள் சிலவற்றை எழுதுக.
2. நமது உடையில் தீப்பற்றினால் நாம் என்ன செய்யவேண்டும்?



3rd_Social_Science_Unit_4.indd 170 2/19/2020 8:19:01 PM

3. நாம் மின்விபத்திலிருந்து எவ்வாறு நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்?
4. நாம் எங்குச் சாலையைக் கடக்க வேண்டும்?
5. சில விஷப்பூச்சிகளின் பெயர்களைக் குறிப்பிடுக


## IV – வண்ணம் தீட்டுவோம்

### சாலைப் போக்குவரத்து விளக்கு (Traffic Signal)

நில்

கவனி


செல்



## செயல்பாடு

## செயல் திட்டம்

**நீ தீபாவளி அன்று பட்டாசு வெடித்த அனுபவத்தைப் பற்றி எழுதுக.**



______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

# வகுப்பு III கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் (பருவம் I, தொகுதி 2) பாடநூல் மேலாய்வாளர்கள் மற்றும் ஆசிரியர்கள்


## கல்வி ஆலோசகர்

**முனைவர் பொன். குமார்**
இணை இயக்குநர் (பாடதிட்டம்),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை – 06.

## பாடநூல் ஒருங்கிணைப்பாளர்கள்

**முனைவர் கே. எஸ். மொழியரசி**
முதல்வர், மாவட்ட ஆசிரியர் கல்வி
மற்றும் பயிற்சி நிறுவனம்.
கீழப்பலூர், அரியலூர் மாவட்டம்.

**கே. ரேவதி**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர்
கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்.
பெரம்பலூர்.

## பாட ஒருங்கிணைப்பாளர்

### கணிதம்

**பி. மலர்விழி**
பட்டதாரி ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
பாடியநல்லூர், திருவள்ளூர்.

### அறிவியல்

**தெ. அசோக்**
முதுநிலை ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல்நிலைப்
பள்ளி, பொன்னேரி, திருவள்ளூர்
மாவட்டம்.

### சமூக அறிவியல்

**சா. மகேஸ்வரி**
முதுகலைப் பட்டதாரி ஆசிரியை,
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி,
விழுப்புரம்.

## கலை மற்றும் வடிவமைப்பு குழு

### பக்க வடிவமைப்பு

ராஜேஷ் தங்கப்பன்
சந்தியாகு ஸ்டீபன்
ஜான் ஸ்மித்
பிரசாந்த். சி
யோகேஷ்
ஏசு ரத்தினம் / பக்கிரி
அடிசன் ராஜ். அ / கோபிநாத்
பொற்செல்வன் / ந. ர. யுவராஜ்
வினோத் குமார் வி

### In–House – QC

காமாட்சி பாலன் ஆறுமுகம்
கி. ஜெரால்டு வில்சன்
அருண் காமராஜ்

### அட்டை வடிவமைப்பு

கதிர் ஆறுமுகம்

### ஒருங்கிணைப்பு

ரமேஷ் முனிசாமி

## கணிதம்

### மேலாய்வாளர்கள்

**முனைவர் இராமானுஜம்**
பேராசிரியர், கணித அறிவியல்
நிறுவனம், தரமணி, சென்னை.

**ஆர். கிருத்திகா**
ஆராய்ச்சி நிறுவனம்
அசிம் பிரேம்ஜி பல்கலைக்கழகம்,
பெங்களூரு.

### பாட நூலாசிரியர்கள்

**பி. கல்பனா**
பட்டதாரி ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
ஆலம்பாக்கம், புல்லம்பாடி
ஒன்றியம், திருச்சி.

**சி. வெங்கடேசன்**
இடைநிலை ஆசிரியர்,
அரசு ஆதிதிராவிடர் நல ஆரம்ப
பள்ளி, வண்டராயன் கட்டளை,
அரியலூர்.

**கே. புஸ்பராஜ்**
பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
நரசிங்கம் பாளையம், அரியலூர்.

**எஸ். கே.சிவகுமார்**
பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
எடையூர், அரியலூர்.

**சி. தோட்டியாதன்**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி,
நமன்குணம், அரியலூர்.

### EMIS தொழில்நுட்பக் குழு

**ரா.மா.சதீஸ்**
மாநில ஒருங்கிணைப்பாளர்
தொழில்நுட்பம்,
கல்வி மேலாண்மை தகவல்
முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி
இயக்ககம்.

**இரா. அருண் மாருதி செல்வன்,**
தொழில்நுட்ப திட்டபணி
ஆலோசகர்,
கல்வி மேலாண்மை தகவல்
முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி
இயக்ககம்.

**க. ப. சத்தியநாராயணா,**
தகவல் தொழில்நுட்ப ஆலோசகர்,
கல்வி மேலாண்மை தகவல்
முறைமை,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி
இயக்ககம்.

## அறிவியல்

### மேலாய்வாளர்கள்

**ஏஞ்சலின் ரூபி**
உதவி பேராசிரியை,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

**முனைவர் க. சிந்தனையாளன்**
பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்
நிலைப் பள்ளி, பெரியார் நகர்,
நந்தம்பாக்கம், காஞ்சிபுரம்.

### பாட நூலாசிரியர்கள்

**ஸ்ரீவத்சன் ராமசாமி**
மதி பௌண்டேஷன்
சென்னை.

**ஹெலன் எட்வர்டு**
விரிவுரையாளர் மாவட்ட ஆசிரியர்
கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்.
திருச்சி.

**எம். மரியதாஸ்**
தலைமையாசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
பலிங்கநாதம், திருமனூர்,
அரியலூர்.

**ந. கோபி**
வட்டார வள ஆசிரியர் பயிற்றுநர்,
நெமிலி ஒன்றியம், வேலூர்.

**கே. கணேசன்**
பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
வெள்ளை பிச்சாம்பட்டி, திருச்சி.

**ஆர். சுவாமிநாதன்**
பட்டதாரி ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
கரு–சேனாபதி, அரியலூர்.

**பி. வசந்தகுமார்**
பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
ஒத்தைபுளிகுடியிருப்பு,
புதுக்கோட்டை.

**கே. செல்வமணிகண்டன்**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளி,
கருக்கை, கடலூர்.

**கே. நிர்மலா மேரி**
இடைநிலை ஆசிரியை, ஊராட்சி
ஒன்றிய துவக்க பள்ளி, ஆரூர்,
சங்கராபுரம், விழுப்புரம்.

**எஸ். ஜானகி**
இடைநிலை ஆசிரியை,
கோபால விலாஷ் அரசு நிதி உதவி
பள்ளி, புதுசத்திரம், தஞ்சாவூர்.

## சமூக அறிவியல்

### மேலாய்வாளர்கள்

**க வேலு,** பட்டதாரி ஆசிரியர்,
அ. ம. மே. நி. பள்ளி, தலைவாசல்,
சேலம் மாவட்டம்.

**சு. கோமதி மாணிக்கம்,**
பட்டதாரி ஆசிரியை,
அ. மே. நி. பள்ளி,
பழைய பெருங்களத்தூர்,
காஞ்சிபுரம்.

**ஸ்ரீவத்சன் ராமசாமி**
மதி பௌண்டேஷன்
சென்னை.

### பாட நூலாசிரியர்கள்

**எல். மாரிமுத்து**
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர்
கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
அரியலூர்.

**எஸ். அபிராமி**
இடைநிலை ஆசிரியை,
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
முத்துவாஞ்சேரி, அரியலூர்.

**கே. மதிமன்னன்**
இடைநிலை ஆசிரியர்,
ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி,
பள்ளிசேரை, விழுப்புரம்.

**ஆர். ஜோஸ்வின் இமாக்குலேட்**
பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்
நிலைப் பள்ளி, பளிங்காநத்தம்,
அரியலூர்.

**ஜி. கண்ணாம்பாள்**
பட்டதாரி ஆசிரியை, அரசு உயர்
நிலைப் பள்ளி, சீலக்குடி,
பெரம்பலூர்.

**ஏ. சின்னப்பன்**
பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்
நிலைப் பள்ளி, பீல்வாடி,
பெரம்பலூர்.

**எம். வரதன்**
பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்
நிலைப் பள்ளி, நன்னை,
பெரம்பலூர்.

**கே. செல்வகுமார்**
வட்டார வள ஆசிரியர் பயிற்றுநர்,
செந்துறை, அரியலூர்.

**எஸ். குணசேகரன்**
பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்
நிலைப் பள்ளி,
டி–பாலூர், அரியலூர்.

**பி. ஆறுமுகம்**
பட்டதாரி ஆசிரியர், அரசு உயர்
நிலைப் பள்ளி, பெருவலப்பூர்,
திருச்சி.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.
ஆப்செட் முறையில் அச்சிட்டோர்:




3rd_Social_Science_Unit_4.indd 172 3/4/2020 10:48:06 AM